


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 18.11.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்








## தமிழக நிகழ்வுகள்

- இந்தியாவின் **முதல் திறந்தவெளி நூலகமான "லிட்டில் ஃப்ரீ லைப்ரரியை"** தமிழகத்தின் திருச்சி மாநகராட்**சியானது புத்தூர் அலுவலக குடியிருப்பில்** தொடங்க உள்ளது.
    - இது வாசிப்பு பழக்கத்தை வளர்க்கவும் உள்ளூர் மக்களிடையே புத்தகங்களை பரிமாறிக் கொள்ளவும் எடுக்கப்பட்ட முயற்சியாகும்.

## இந்திய நிகழ்வுகள்

- புது டெல்லியிலுள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் (**IGI – Indira Gandhi International**) சுற்றுலா எளிதாக்கல் மற்றும் தகவல் மையத்தை (**Tourist Facilitation and Information Counter**) **மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகம்** தொடங்கியுள்ளது.
    - இந்த மையமானது ஆங்கிலமில்லாத மொழி பேசும் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவ சுற்றுலா அமைச்சகத்தின் **24 × 7 மணி நேர உதவி எண்ணான 1363** என்ற எண்ணை வழங்கியுள்ளது.

- **இந்தியா – மொஸாம்பிக்** ஆகிய நாடுகளுக்கிடையேயான **சர்வதேச ஒத்துழைப்பு** உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, மொஸாம்பிக் கடற்படை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு இந்தியாவின் மிக பல்திறன் கொண்ட, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **இடைமறிப்பு படகுகள்** கொண்டு இந்தியாவின் சார்பில் சிறப்பு பயிற்சியானது **சென்னையில்** வழங்கப்பட்டது.
- **குறிப்பு:**
    - இந்திய அரசானது மொசாம்பிக் கடற்படைக்கு **2 இடைமறிப்பு படகுகளை நன்கொடையாக** வழங்கி உள்ளது.

- அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட நிறுவனமான தேசிய பொருளாதார ஆய்வு அமைப்பினால் **(National Bureau of Economic Research – NBER)** வெளியிடப்பட்ட சமீபத்திய ஆய்வின் படி, **புனே** நகரமானது **இந்தியாவின் 7-வது நெருக்கடியான நகரமாக** உள்ளது.
    - இந்த ஆய்வின் படி, மிக நெருக்கடியான நகரமாக **பெங்களுரு**

உள்ளது. **2-வது இடத்தில் மும்பை** உள்ளது. **சென்னையானது** இப்பட்டியலில் **4-வது இடத்தில்** உள்ளது.

## உலக நிகழ்வுகள்

- சர்வதேச பெண் விமானிகள் சங்கம் **(ISA + 21 – International Society of Woman Airline Pilots)** வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின் படி உலகின் அதிக அளவிலான பெண் விமானிகளின் சதவிகிதத்தை இந்தியா கொண்டுள்ளது. மேலும் இந்தியாவின் பெண் விமானிகளின் சதவிகிதமானது உலக சராசரியை விட இருமடங்கு அதிகமாகும்.
- **குறிப்பு:**
  - **உலக பெண் விமானிகளின் சதவிகிதம் - 5.4% ஆகும்.**
  - **இந்தியாவின்** தற்போதைய பெண் விமானிகளின் சதவிகிதம் - **12.4%** ஆகும்.

- கிழக்கு ஆசிய நாடுகளின் 13-வது உச்சி மாநாடு **(Thirteenth East Asia Summit – 2018)**, சிங்கப்பூரில் **நவம்பர் 14 முதல் 15 வரை** நடைபெற்றது. இம் மாநாட்டில் ஆசியாவின் கிழக்கில் உள்ள நாடுகளுக்கிடையேயான பொருளாதார மேம்பாடு ஒத்துழைப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.
- குறிப்பு:
  - **பன்னிரண்டாவது கிழக்கு ஆசியா உச்சி மாநாடு**, பிலிப்பைன்ஸ் நாட்டின் **பாசே நகரில்** நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- ஸ்பெயினில் நடைபெற்ற **உலக கேடட் செஸ்** தொடரில் 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் இந்தியாவின் **குகேஷ் 10 புள்ளிகளுடன் தங்கப் பதக்கம்** வென்றுள்ளார்.
  - சுமார் 86 நாடுகள் பங்கேற்ற இப்போட்டியில் இந்தியா 2 தங்கங்களுடன் இரண்டாவது இடம் பிடித்துள்ளது. சீனாவானது முதலிடம் (2 தங்கம், 1 வெண்கலம்) பிடித்துள்ளது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **காவல்துறை பணியாளர்களுக்கு** பணி சம்பந்தப்பட்ட அன்லைன் பயிற்சிகள் மற்றும் தகவல்களை வழங்குவதற்காக டெல்லி காவல் துறையானது **“நிபுண்” (NIPUN)** என்ற **மின்னணு கற்றல் தளத்தை** தொடங்கியுள்ளது.
    - இந்த ஆன்லைன் கற்றல் தளமானது, கூட்டுமுயற்சி கற்றல் மற்றும் கூட்டுப் பங்காண்மைத் திட்டத்தின் **(The Collaborative Learning and Partnership – CLAP)** கீழ் பல்கலைக்கழக மானியக் குழு (UGC), FICCI, தேசிய மனித உரிமைகள் ஆணையம், தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் ஆகியவை இணைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- **சென்னை உயர்நீதிமன்றத்தின்** புதிய நீதிபதியாக **பி.புகழேந்தி** என்பவரை **மத்திய சட்ட அமைச்சகம் நியமித்துள்ளது**. தற்போது சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கை 60-ஆக உயர்ந்துள்ளது.
    - இவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் தமிழக அரசின் கூடுதல் அட்வகேட் ஜெனரலாக பணியாற்றி வருகிறார்.
- **குறிப்பு:**
    - சென்னை உயர்நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு – 15 ஆகஸ்ட் 1862
    - சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி (தற்போது) - **விஜய தஹில் ரமணி**

We Shine Academy™